BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
An international open access, peer- reviewed, refereed journal

அக இலக்கியங்களில் ஆயர்கள்
Pastoral people of Mullai land in Agam Literature

முனைவர் அ. ஜோதி ரவீந்திரன்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நாகர்கோவில். 4

Dr. A. Jyothi Ravindran
Assistant Professor, Dept. of Tamil, Government Arts and Science college, Nagerkovil - 4

Abstract

In the Sangam period, lands were divided into five categories based on livelihood; Kurinji, Mullai, Marutham, Neythal and Palai. The lifestyles of the people living in these lands were based on caste status. The literature has graphically recorded the socio-economic status and lifestyles of the people groups and the social structure of the sangam period. The terms kulam and Kudi are given in the Sangam society to refer to the family status and general status of the people groups. Although these two terms seem to be the same, they explain the meaning of kulam as a way of living due to the occupation done by the people groups and also to highlight the lifestyle of the priests.

Key words : Mullai Thinai (a type of land in ancient Tamil literature) –Aayar -cowherd – Andar - Idaiyar – Kudavar – Poozhiyar –Pothuvar – Pullinaththu Aayar – Nallinaththu Aayar – Punavan – Aanirai

முன்னுரை

சங்ககாலத்தில் வாழ்வொழுக்கம் சார்ந்து நிலங்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்தாகப் பகுக்கப்பட்டன. இந்நிலங்களில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறைகள் திணை நிலை சார்ந்ததாக இருந்தன. சமூகப் பொருளாதார நிலைகளும் மக்கள் குழுவினரின் வாழ்க்கை முறைகளையும் சங்க கால சமூக அமைப்பு மனித குல பகுப்புகளை வரைவியல் பதிவுகளாக இலக்கியங்கள் வெளிப்படுத்தி உள்ளன.

சங்க சமூக மக்கள் குழுவினரின் குடும்ப நிலை, பொதுநிலை எனக் குறித்து வரும் சொற்களில் குலம், குடி என்பன வழங்கப்படுகின்றன. இந்த இரண்டு சொற்களும் ஒன்று போலத் தோன்றினாலும் அவை மக்கள் குழுவினர் செய்யும் தொழிலால் வாழும் முறையால் குளம் என்று குறிக்கப்படுவதை விளக்குவதாகவும் ஆயர்களின் வாழ்வியலை எடுத்துரைப்பதாகவும் இக்கட்டுரை அமைகின்றது.

ஆயர் குடி மக்கள்

முல்லை நிலத்தவர் ஆயர் என்னும் பொதுப் பெயரால் குறிக்கப்படுகின்றனர். மக்கள் அண்டர், ஆயர், இடையர், குடவர், பூழியர், பொதுவர், கோவலர் எனப் பல குழுவினராக இருந்துள்ளனர். இவர்கள் தாங்கள் செய்த தொழிலாளும் வாழிட வாழ்வியல் முறைகளாலும் பகுக்கப்பட்டனர். முல்லை நில மக்கள் பெரும்பான்மையாக இலக்கியங்களில் முல்லை நில தலைவர்களாகக் கூறப்பட்டு உள்ளனர் இவர்கள் தேர்தலில் பூட்டப்பட்ட குதிரைகளை செலுத்தி வருவதாகக் கூறப்படுகின்றனர். சங்ககாலத்தில் குதிரை பயன்பாட்டை முல்லை நில மக்கள் வழியாக அறிய முடிகின்றது.

தொல்காப்பியர் காலத்தில் குறிக்கப்படும் மனித குழுக்களில் முதலாவதாகக் குறிக்கப்படும் குழு ஆயர்கள் ஆவர். பத்துப்பாட்டில் முல்லைப்பாட்டு இவ் ஆயர்களின் வாழ்வியல் சூழல்களைத் தெளிவாக உரைக்கின்றது.

ஆயர்கள் ஆநிரை மேய்த்தல், விரிச்சி நிற்றல் முதல் முதலான கூறுகளில் ஆயர்களின் செயல்பாடுகள் பதிவாகியுள்ளன

ஆயர் குடிகளின் பிரிவுகள்

ஆயர்களின் தொழில்கள்:

உணவு, உடை, இருப்பிடம் சார்ந்த அடிப்படையான தேவைகளின் தேடல்களுக்கு ஏற்ப தொழில் முறைகள் மக்களிடையே உருவாகின. அவ்வகையில் ஆயர் விலங்குகளைப் பழக்கினர் குறிப்பாக ஆநிரைகளைப் பழக்குவதில் இவர்கள் சிறந்தவர்களாக இருந்தனர். ஆநிரைகளைப் பழக்கி அவற்றை தங்கள் வாழ்வாதாரத்திற்குப் பயன்படுத்தினர். அவற்றிலிருந்து வரும் பால் பண்டங்களை உற்பத்தி செய்தும் இறைச்சியைப் பயன்படுத்தியும் சிலர் தன் வாழ்வாதாரத்தை நிறைவேற்றினர். ஒரு சிலர் ஆநிரைகளைப் பழக்கியதோடு வலிமைமிக்க காளை மாடுகளை கொண்டு சம வெளிப்பகுதிகளில் உழவுத் தொழில்களை மேற்கொண்டனர் இவ்வாறு நிலையான ஒரு வாழ்க்கை முறையினை ஆயக்குழுக்கள் மேற்கொண்டு வாழ்ந்து வந்தனர்.

சங்க கால ஆயர் சமூகம்

ஆயர்களில் நல்லினத்து ஆயர், புல்லினத்து ஆயர் என இருவகையினர் இருந்துள்ளனர். நல்லினத்தரை,

"நல்லினத்து ஆயர், ஒருங்குதொக்கு எல்லாரும்"

(கலித்தொகை 104:6)

எனக் கலித்தொகை குறிக்கின்றது. "புல்லினத்தாயர்" இனத்தைப் பற்றி,

"புல்லினத்து ஆயர் மகளிரோடு எல்லாம்"

(கலித்தொகை 111:5)

என்னும் தொடர் குறிக்கின்றது. ஆயர் இளம்பெண்கள் ஆய்ச்சியர் எனப்பட்டனர் என்பதை,

"அன்புறு காதலர் கைபிணைந்து, ஆய்ச்சியர்"

(கலித்தொகை 106:32)

என்னும் கலித்தொகை வரி உணர்த்துகின்றது. இவற்றால் ஆயர் என்போர் மேய்ச்சல் நிலப்பகுதிகளில் வாழும் குடியினர் என்பதும், ஆநிரைகளைப் பழக்கும் திறனுடையோர் என்றும் அறியமுடிகிறது.

தமிழகத்தின் ஆயகுடிகளிடம்கூட பெருவழி பற்றிய செய்திகள் பலவும் உள்ளன. இதில் அகநானூறு பாடல்களில் (14,64,74) கால்நடை மேய்த்தவர்களின் புலப்பெயர்கள் பின்னாளில் பெருவழிகளாக மாறின என்பதை பாடல் மூலமாக அறியமுடிகின்றது. உலக அளவில் பார்க்கும் போது உண்மையில் ஆயர் நாடோடியமானது ஒன்றும் விளையாத வறண்ட நிலப்பகுதிகளிலும் ஓரளவு வறண்ட நிலப்பகுதிகளிலும் தோன்றி நிலைப்பெற்று வந்துள்ளது. சங்ககாலத்திலும் அதற்குப் பின்னரும்கூட ஆயர் வாழ்வைப் பார்க்கும் பொழுது அது உண்மையான நாடோடியமாகத் தெரியவில்லை. ஆயர்;கள் நிலையான குடியிருப்புகளில் வாழ்ந்துள்ளனர். இதனை,

"ஆடுதலைத் துருவின் தோடுதலைப் பெயர்க்கும்
வன்கை இடையன் எல்லீப் பாழி
வெண்போழ் தந்தைஇய அலங்கல்அம் தொடலை
மறுகுடன் கமழும் மாலை
சிறுகுடில் பாக்கத்துஎம் பெருநக ரானே"

(நற்றிணை பா. 169)

எனும் வரிகளில் பருவ காலங்களுக்கு ஏற்ப மேய்ச்சல் நிலங்களைத் தேர்ந்தெடுத்து இடம்பெயர்ந்து கால்நடைகளை வளர்த்து வந்தனர்.

நாடோடி வாழ்க்கை முறை சங்ககால ஆயர்களிடம் இருந்ததாக அறிய முடிகிறது. சங்ககால ஆயர்களின் பொருளாதாரம் உபரியை மையமிடாத பிழைப்புக்கு மட்டும் ஆதாரத்தை தேடுகின்ற பொருளாதாரமாக இருந்தது. ஆனால் ஒரு கட்டத்தில் ஆயர்கள் ஆநிரைகளை உரிமையாக்கி வேளாண்மையையும் செய்ய ஆரம்பித்தனர். இதனை,

"கொல்லைக் கோவலர் குறும்புனம் சேர்ந்த
குறுங்காற் குரலின் குவிஇணர் வான்பூ
ஆடுடை இடைமகன் ஆடப்பூக்கும்"

(நற்றிணை பாடல் 266, 1-3 வரிகள்)

இதனால் இக்கட்டத்தில் ஆயர்கள் கலப்புப் பொருளாதாரத்தை ஏற்றுக் கொண்டவர்களாக மாறினார்கள். சங்க இலக்கியத்தைப் பொறுத்தவரை முல்லைத் திணையில் உழவும் குறம்புனத்தில் புன்செய் பயிரிடுதலும் குறிஞ்சித்திணைக்கடுத்து மேலும் விரிவு பெற்றது.

"பேர்உரை தலைஇய பெரும்புலர் வைகறை
ஏற்இடம் படுத்த இருமறுப் பூழிப்"
(அகம் - பா. 196, 1-16)

முல்லை நிலத்தில் புன்செய் விவசாயம் செய்தவர்களை அகநானூறு "கொல்லை உழவர்" என்று குறிப்பிடுகின்றது. இதனை,

"கொல்லை உழவர் கூழ்நிழல் ஒழித்த"
(அகம்.194, 13வரி)

என்பதில் அறியலாம். சங்ககாலத்தில் ஏற்பட்ட காடெரிப்பு வேளாண்மை முதலில் குறிஞ்சித் திணையில்தான் உருவானது. காட்டைவெட்டி அவ்விடத்தில் உள்ள மரங்களையும் புதர்களையும் எடுத்துச் சாம்பலாக்கி அந்த இடத்தில் பயிரிட்டனர். இதே முறையில் முல்லை நிலத்தில் விறகு பயிரிட்டதைக் காணமுடிகிறது. இந்நிலையில் ஆயர்கள் மேய்த்தல் தொழிலிலிருந்து வேளாண் வாழ்க்கை முறையைப் பெற்றனர்.

பிற தானியங்கள் சேமித்து வைப்பதற்குக் குதிர்கள் காணப்பட்டன. இக்குதிர்கள் யானையின் பாதம் போல வட்டமாக இருந்தன. இத்தகைய வாழிடத்தில் சிறு வண்டிகளும், கலப்பைகளும் நெடுஞ்சுவர் மீது சார்த்தப்பட்டிருந்தன. குடிசைகளின் கூரை வரகு வைக்கோலால் வேயப்பட்டிருந்தன. கோவலர்கள் தங்களுடைய ஆநிரைகளைக் காப்பதற்கு இரவில் பெரிய மரக்கட்டைகளை எரித்தார்கள் முதலிய செய்திகளை நற்றியைப் பாடல் ஒன்று விளக்குகிறது.

மக்கள்

முல்லை நிலத்தவர் ஆயர் என்னும் பொதுப்பெயரால் குறிக்கப்பட்டிருந்தாலும், இங்கு மேலும் பல மக்கள் குழுவினர் வாழ்ந்துள்ளனர். இந்நிலத்தில் வாழ்ந்த மக்கள், அண்டர், ஆயர், இடையர், குடவர், கோவலர், பூழியர், பொதுவர் என்னும் பல குழுவினராக இருந்தனர். இவர்கள் தங்கள் தொழிலாலும் வாழிட, வாழ்வியல் முறைகளாலும் பகுக்கப்பட்டனர்.

அண்டர்

சங்கப்பாடல்களில் தேரில் வருவதாகக் கூறப்படும் இடங்களில் இடம்பெறுவோர் முல்லை நிலத் தலைவர்களே ஆவர். இவர்களின் தேர்களில் பூட்டப்பட்ட குதிரைகளை நிமிர்சுவல், புரவி, கலிமா என்னும் தொடர்களால் சுட்டுவர்.

இக்குதிரைகளைப் பழக்குவதிலும், அவற்றைக் கொண்டு தேர் செலுத்துவதிலும் வன்மையுடையோராய் இருந்த குழுவினரை அண்டர் எனக் குறிக்கும் மரபு சங்க காலத்தில் காணப்படுகிறது. இவ் "அண்டர்" முல்லை நிலக் குடி மக்கள் என்று பதிற்றுப்பத்து பாடல் வரி குறிப்பிடுகிறது.

"கால்வல் புரவி அண்டர் ஓட்டி"

என்னும் பாடலடி உணர்த்தும். இவ்வகைக் குழுவினர் குதிரைகளைப் பழக்குவதில் திறனுடையவர்களாக இருத்தல் வேண்டும். மேலும் இவர்கள் தேரோட்டிகளாக மன்னர்களோடும், வணிகர்களோடும் தொடர் புற்றிருத்தல் வேண்டும் என்பது மேற்குறித்த தொடரால் அறியப்படுகின்றது. அண்டர்களின் தலைவன் கழுவுள் என்று அழைக்கப்பட்டான்.

ஆயர்களின் வாழிடமும் சூழலும்

காடும் காடு சார்ந்த இடமும் "முல்லை" எனப்பட்டது. காட்டை ஒட்டியே ஆயர் சமூகத்தினர் வாழ்ந்துள்ளனர். இதனால் ஆயர்கள் "காடுறை இடையன்" எனப்படுகின்றனர். இவர்கள் வாழ்ந்த காட்டு நிலப் பகுதிகள் "முல்லை" "புறுவு" "வன்புலம்" எனப் பலவாகக் குறிக்கப்பட்டன. மேய்ச்சல் நிலம் "விருநிலம் எனப்பட்டது. முல்லை திணையில் பயிரிடாமல் தரிசாய்க் கிடந்த நிலத்தைக் "கொல்லை" எனவும் அழைத்தனர் என்பதை,

"கொல்லை இரும்புனம் நெடிய என்னாது"
(அகம். 89-17)

என்பதன் வழி இதனை அறியலாம். மரங்கள் அடர்ந்த முல்லைப் பகுதியை, 'புறவு, கானம்' எனவும் அழைப்பா. இதனை,

"கானம் கார் எனக் கூறினும்" (குறுந் 21-4)

என்னும் தொடர் உணர்த்தும். முல்லைத் திணையில் விவசாயம் ஏற்பட்ட காலத்தில் மரங்களை அழித்து விளைநிலமாக்கப்பட்ட புதிய புனமானது. அகநானூறு பாடல் வரிகள் இதைப் புனம் எனக்கு குறிக்கின்றது. இதனை,

"இதைப்புன வரகின் அவைப்புமான் அரிசியொடு"
(அகம் 394 – 3)

என்ற தொடரால் உணரலாம்.

இதனைப் போன்றே, பழைய விளை நிலத்தை "தினைப்புனம்" என்றும் கூறுவர். குறுந்தொகையின்,

"புனவன் துடலைப் பொன்போல் சிறுதினை"

(குறுந்.105-1)

என்னும் வரி உணர்த்தும். இத்தகைய நிலப்பரப்புகளைக் குறிஞ்சி, முல்லை ஆகிய இரண்டு திணை நிலப்பரப்புகளாகக் கொள்ள முடியும். இவற்றுள் மண்வளமும் நீர்வளமும் குறைந்த பகுதிகள் "வன்புலம்" என்றே வகைப்படுத்தப்பட்டன. "வன்புலக் கேளிர்க்கு வருவிருந்து அயரும், வித்து வான் நோக்கும் புன்புலம்" ஆகிய பாடல்களின் மூலம் வன்புல நிலத்தை அறியமுடிகிறது.

முல்லை நிலத்து உழவர்கள் வாழ்ந்த ஊர்கள் முள்காடுகள் சூழ்ந்திருந்தன. வீடுகள் முற்றங்களைக் கொண்டிருந்தன. முற்றத்தில் வரகு, பிற தானியங்கள் சேர்த்து வைப்பதற்கு குதிர்கள் காணப்பட்டன. யானையின் பாதம்போல வட்டமாக இருந்தன. இத்தகைய வாழிடத்தில் சிறு வண்டிகளும் கலப்பைகளும் நெடுஞ்சுவர் மீது சார்த்தப்பட்டிருந்தன. குடிசைகளின் கூரை வரகு வைக்கோலால் வேயப்பட்டிருந்தன. ஆயர்கள் தங்களுடைய ஆநிரைகளைக் காப்பதற்கு இரவில் பெரிய மரக்கட்டைகளை எரித்தார்கள் முதலிய செய்திகளை நற்றிணைப் பாடல் விளக்குகிறது.

முடிவுரை

அக இலக்கியங்களில் பாடுபொருளாக்கப்பட்ட சங்க கால மக்கள் குழு கள் சமூக அமைப்பு நிலையில் உடைமை சமூகமாக மாற்றப்பட்டுள்ளனர் என்பது அறிய முடிகின்றது. ஆயர் சமூகம் ஆண் உடைமை சமூகமாக மாறியதை அக இலக்கியங்கள் விளக்கியுள்ளன. இதனால், குலமுறை சமூகங்கள் தோற்றம் பெற்றுள்ளன என்றும் கூறலாம். இக்குல முறை சமூகம் தோற்றம் பெற காரணம் தொழில் சார் குடிகளாக இருந்த சங்க கால சமூக அமைப்புக் காலப்போக்கில் நிலம் சார் குடிகளாக மாறியதால் நிலப்பரப்புகளில் ஆணின் ஆதிக்கம் கட்டமைக்கப்பட்டதாக இருந்தது. இந்நிலையில் குடிகள் என்னும் குலமுறை சமூகம் தோற்றம் பெற்றது எனலாம். மனித குல வரலாற்றில் குலம் என்பது குறிப்பிட்ட பிரிவினையும், குடி என்பது அதன் உள் இருக்கும் உட்பிரிவினையும் குறிப்பதாக இருந்தாலும் தனிமை பண்புடைய குலம் முறை சமூகம் ஆணை முன்னிறுத்திய நிலையில் இச்சமூக அமைப்பு மாறிய நிலையில் தொழில் சார்ந்த குடிகளாக மாறிய காரணத்தால் நிலம் சார்ந்த குடிகளாக இருந்தவர்களின் அதிகாரங்கள் சுருங்கி முல்லை நில ஆயர் சமூகத்தில் ஆணின் அதிகாரம் மேலோங்கியது. ஆயர் சமூகத்தில் ஆணுடைமை சமூகக் கட்டமைப்பு ஆதிக்கத்தின் காரணமாக மாறியது.

துணை நூற்பட்டியல்

அன்னிதாமசு, தமிழர் சமூகவியல், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,, சென்னை

கந்தையா, ந.சி., தென்னிந்திய குலங்களும் குடிகளும், வள்ளுவம் கணினி அகம், சென்னை, 1999

சுப்பிரமணியன், ச.வே., சங்க இலக்கயம் பத்துப்பாட்டு முழுவதும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2010

Funding

No funding was received for conducting this study.

Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.